செ.வெ.எண்.17 நாள்.07.09.2020

பத்திரிகை செய்தி

கடலூர் மாவட்டம்

**காட்டுமன்னார்கோயில் பட்டாசுத் தொழிற்சாலைலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொதுநிவாரண நிதிக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், காட்டுமன்னார்கோயில் பட்டாசுத் தொழிற்சாலைலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொதுநிவாரண நிதிக்கான ரூ.14 இலட்சத்திற்கான காசோலையினை சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.பாண்டியன் அவர்கள் மற்றும் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.முருகுமாறன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2020) வழங்கினார்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், குருங்குடி கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில், பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. சின்னதுரை என்பவரின் மனைவி திருமதி காந்திமதி, திரு பெருமாள் என்பவரின் மனைவி திருமதி மலர்கொடி, திரு. நம்பியார் என்பவரின் மனைவி திருமதி லதா, திரு. மாதவன் என்பவரின் மனைவி திருமதி ராசாத்தி, திரு. உத்திராபதி என்பவரின் மனைவி திருமதி சித்ரா, திரு. ராஜேந்திரன் என்பவரின் மனைவி திருமதி ருக்மணி மற்றும் திரு. ரங்கநாதன் என்பவரின் மனைவி திருமதி ரத்தினம்மாள் ஆகிய ஏழு நபர்கள் உயிரிழந்தனர்.

அதனடிப்படையில் இந்த துயரச் செய்தி குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிந்தவுடன், மீட்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும், காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிப்பதை உறுதி செய்யவும், இறந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளை செய்யவும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் உத்தரவிட்டார். மேலும் இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களின் குடும்ப நிலையினை கருத்தில் கொண்டு அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று விபத்து நடைபெற்ற இடத்தினை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

அதனை தொடர்ந்து இன்று (07.09.2020) காட்டுமன்னார்கோவில் வட்டம், குருங்குடி கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில், பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த திருமதி காந்திமதி, திருமதி மலர்கொடி, திருமதி லதா, திரு. திருமதி ராசாத்தி, திருமதி சித்ரா, திருமதி ருக்மணி மற்றும் திருமதி ரத்தினம்மாள் ஆகிய ஏழு நபர்களின் வாரிதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதி தலா ரூ.2 இலட்சம் வீதம் ரூ.14 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.